செ.வெ.எண். 05

**பத்திரிக்கை செய்தி** நாள். 03.04.2017

---

திருநெல்வேலி மாவட்டத்தில் தற்போது நடைமுறையில் உள்ள பழைய குடும்ப அட்டைக்குப் பதிலாக புதிய ஸ்மார்ட் கார்டு (மின்னணு குடும்ப அட்டை) 01.04.2017-ம் முதல் அச்சிட்டு பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. சில தினசரி பத்திரிகைகளில் குடும்ப தலைவராக பெண்கள் புகைப்படம் அச்சிடப்பட்டுள்ளதாகவும், முகவரி, தகப்பனார் பெயர், கணவர் பெயர் தவறுதலாக அச்சிடப்பட்டுள்ளதாக ஆதாரமற்ற செய்திகள் வெளியிடப்படுகின்றன. தற்போது வழங்கப்பட்டு வரும் ஸ்மார்ட் (முன்னுரிமை குடும்ப அட்டைதாரர்கள் - PHH) ரேஷன் கார்டில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி குடும்பத்தில் 18 வயதிற்கு மேல் உள்ள மூத்த பெண்மணி குடும்பத் தலைவராக குறிப்பிடப்பட்டிருக்கும் என்ற தகவல் தெரிவிக்கப்படுகிறது. இது பெண்களை பெருமைப்படுத்தி மதிப்பளிக்கும் செயலாகும்.

மேலும் ஸ்மார்ட் ரேஷன் கார்டில் உள்ள முகவரி விபரமானது தேசிய மக்கள் தொகை பதிவேடு, மற்றும் ஆதார் அட்டையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. ஸ்மார்ட் ரேஷன் கார்டில் தங்களது முகவரி அல்லது பெயர் ஏதும் திருத்தம் செய்ய வேண்டியதாயிருப்பின் www.tnepds.gov.in என்ற இணைய தளத்திலும், மேலும் TNEPDS என்ற APP-யை டவுண்லோடு செய்து தங்களது ஆண்டராய்டு மொபைல் கைப்பேசி மூலமும், அரசு இ-சேவை மையம் மூலமும், திருத்தம் செய்து கொள்ளலாம். இந்த மாற்றங்கள் தங்களது ஸ்மார்ட் ரேஷன் கார்டில் தானாகவே பதிவேற்றம் செய்யப்பட்டுவிடும். பின்னர் முகவரி மாற்றம், திருத்தம் செய்த ஸ்மார்ட் ரேஷன் குடும்ப அட்டைகளை அரசு சேவை மையத்தில் அச்சிட்டு பெற்றுக் கொள்ளலாம் என்ற விபரம் பொது மக்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர்
திருநெல்வேலி

---

ந.க.எண். ண6/11250/16

மாவட்ட வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம்
திருநெல்வேலி.
நாள்: .04.2017.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்